**செ.வெ. எண்: 149** **நாள்: 24.02.2012**

## <u>தமிழ் வளர்ச்சித் துறை சார்பாக பள்ளி / கல்லூரி மாணவர்களுக்கான கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் 25ஆம் தேதி சனிக்கிழமை சென்னையில் நடைபெறுகிறது</u>

பள்ளி / கல்லூரி மாணவர்களின் பேச்சாற்றலையும், படைப்பாற்றலையும் மேம்படுத்தும் நோக்கில், தமிழ் வளர்ச்சித் துறையால், தமிழகம் முழுவதுமுள்ள பள்ளிகளில் 11,12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கும் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கும் ஆண்டுதோறும் தனித்தனியே கவிதை / கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகளும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இத்திட்டம் 2002-2003ஆம் ஆண்டில் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டவாறு 2002-03ஆம் ஆண்டு முதல் தமிழ் வளர்ச்சித் துறையால் இத்திட்டம் தொடர்ந்து நடத்தப் பெற்று வருகிறது. இத்திட்டம் மாணவ / மாணவியர்களிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தை மேம்படுத்தும் வகையில் 2011-12ஆம் ஆண்டு முதல் மாவட்ட அளவில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளுக்கு வழங்கப்பட்டு வந்த முதல் பரிசுத் தொகையை ரூ.1000/–லிருந்து ரூ.10,000/–ஆகவும், இரண்டாம் பரிசுத் தொகையை ரூ.500/–லிருந்து ரூ.7,000/-ஆகவும் உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளார். அதேப் போன்று மாநில அளவில் வழங்கப்படும் முதல் பரிசுத் தொகையை ரூ.5,000/–லிருந்து ரூ.15,000/–ஆகவும், இரண்டாம் பரிசுத் தொகையை ரூ.3,000/–லிருந்து ரூ.12,000/–ஆகவும், மூன்றாம் பரிசுத் தொகையை ரூ.2,000/–லிருந்து ரூ.10,000/–ஆகவும் உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளார். இவ்வகையில் மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்கான போட்டிகள் 19.01.2012 அன்றும் கல்லூரி மாணவர்களுக்கான போட்டிகள் 20.01.2012 அன்றும் நடத்தி முடிக்கப்பட்டன. மாவட்ட அளவில் முதல் பரிசு பெற்றவர்கள் மாநில அளவிலான போட்டியில் கலந்து கொள்ள உள்ளனர்.

பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான மாநில அளவிலான போட்டிகள் 25.02.2012 சனிக்கிழமை சென்னை, எழும்பூரிலுள்ள மாநில மகளிர் மேல்நிலைப்பள்ளியில் தனித் தனியே நடைபெறவுள்ளன. இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, அரசு செயலாளர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளார். இப்போட்டிகளுக்கான ஏற்பாடுகளை தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொண்டு வருகிறது.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**